DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 170/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : ஜெய்சங்கர் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th June 2025.

1ம் **எதிரி ஆஜர். 2 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் பாம்புகோவில்சந்தையில் குடியிருந்து வருகிறேன். நான் தற்காலிகமாக சென்னையில் சுயதொழில் செய்து வருகிறேன். அ.சா.1 சாந்தாதேவி எனது உடன்பிறந்த சகோதரி. எதிரிகளை தெரியும். 08.12.2008ம் தேதி சங்கரன்கோவில் பெரிய கோவிலில் வைத்து அ.சா.1க்கு 1ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்று சங்கரன்கோவிலில் ரயில்வேபீடர் ரோட்டில் உள்ள மண்டபத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. திருமணத்தின்போது எனது அக்காவிற்கு 35 சவரன் தங்கநகையும்,2 லட்சம் ரொக்கமும், இதர சீர்வரிசை பொருட்கள் சுமார் 5 லட்சம் மதிப்புள்ள ஒரு 407 வண்டியிலும், ஒரு சிறிய வண்டியிலும் சீர்வரிசை பொருட்களை கொடுத்தோம். திருமணம் முடித்து 1ம் எதிரியின் வீட்டில் அம்மாவுடன் சங்கரன்கோவிலில் 5 வீட்டு லைனில்

குடியிருந்து வந்தார்கள். 6 மாதம் கழித்து சங்கரன்கோவில் என்ஜிஓ காலனியில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து எனது அக்காவும் 1ம் எதிரியும் வாழ்ந்து வந்தார்கள். எனது அக்கா M.A.B.Ed படித்திருந்தார். அந்த சமயத்தில் வேலைக்காக படித்துக் கொண்டிருந்தார். எனது அக்காவின் மாமனார் ஜெகநாதன் எனது அக்காவிற்கு வேலை வாங்கித்தருவதாக கூறி ரூ.5 லட்சம் வாங்கி வரச்சொல்லி கேட்டார், ஆனால் எனது அக்கா நான் படித்துக்கொண்டிருக்கிறேன். கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். ஆனால் எதிரிகள் அனைவரும் சேர்ந்துகொண்டு ரூ.5 லட்சம் வாங்கிவரச்சொல்லி என் அக்காவை வற்புறுத்தினார்கள். ஆனால் ஆரம்பத்தில் எங்கள் வீட்டில் நாங்கள் மனக்கஷ்டம் படுவோம் என்று எனது அக்கா எங்களிடம் தெரிவிக்கவில்லை. அதன்பின்பு எதிரி வீட்டிற்கு தேவையான அத்தியாவசியப்பொருட்களை வாங்கிப்போடாமல் இருந்த சூழ்நிலையில் 1ம் எதிரி வேறொரு பெண்ணுடன் 2,3 தடவை போனில் பேசிக்கொண்டிருப்பதை எனது அக்கா கவனித்திருக்கிறார். 1ம் எதிரி வார விடுமுறை நாட்களில் வெளியூருக்கு சுற்றுலா செல்வதாக சொல்லி சென்றுவிடுவார்.அந்த சூழ்நிலையில் எனது அக்கா குழந்தையை பராமரிக் கமுடியாமல் வழியில்லால் இருந்த சூழ்நிலையில் நடந்த விபரங்கள் அனைத்தையும் எங்களிடம் கூறினார். 2012ம் வருடம் 1ம் எதிரி மற்றும் அவரது குடும்பத்தாரின் தொல்லை தாங்க முடியாமல் எதிரிகள் ரூ.5 லட்சம் கேட்டது, சாப்பாடு கொடுக்காமல் கஷ்டப்படுத்தியது, மற்ற கொடுமைகளை எனது அக்கா எங்களிடம் கூறினார். எதிரிகளுக்கு ரூ.5 லட்சம் தேவைப்பட்டுள்ளது அதற்காக அவ்வாறு கேட்டுள்ளார்கள். அதன்பின்பு 2012ம் வருடம் எனது அக்கா அவர் அன்றையதினம் அணிந்திருந்த நகைகள் மற்றும் தேவையான உடைகள் மற்றும் அவர் படித்துகொண்டிருந்த புத்தகங்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு பாம்புகோவில்சந்தையில் உள்ள எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார். அன்றையதினம் எனது அப்பா அருள்ராஜ் ஹைதராபாத்தில் உள்ள நேஷனல்

போலீஸ் அகாடமியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அங்கு எனது அக்காவையும், அவரது குழந்தையையும் அழைத்து சென்றுவிட்டார். அங்கு எனது அக்கா எனது அப்பாவுடன் சுமார் 1, 1–1/2 வருடம் வாழ்ந்து வந்தார். 2013 ம் வருடம் 1ம் எதிரிக்கு அவரது குடும்பத்தினர் உதவியுடன் ராஜபாளையத்தில் வைத்து பெர்சிஸ்தாமஸ் என்ற பெண்ணுடன் வேறு ஒரு திருமணம் செய்து வைத்ததாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. ஆனால் நாங்கள் அவ்வாறு இருக்காது என்று நினைத்துக்கொண்டிருந்தோம். 2014 ம் ஆண்டு 1ம் எதிரிக்கு குழந்தை பிறந்ததாக செய்தி கேட்டு எனது அக்காவை எனது அப்பா பாம்புகோவில்சந்தை அழைத்து வந்தார். நாங்கள் தெரிந்தவர் மூலமாக 1ம் எதிரி 2 வது திருமணம் செய்து கொண்டதை விசாரித்துக்கொண்டிருந்தோம். 2014 ம் வருடம் ஒரு நாள் தேதி மாதம் ஞாபகம் இல்லை நாங்கள் விசாரித்துக் கொண்டிருப்பது தெரிந்து 1ம் எதிரியும், அவரது குடும்பத்தினரும் பாம்புகோவில்சந்தை என்ற ஊரில் உள்ள எங்கள் வீட்டிற்கு வந்து 1ம்எதிரிக்கு விவாகரத்து கொடுங்கள் எதற்காக விசாரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டு எனது அக்காவிடம் பிரச்சனை செய்தார்கள். அந்த சத்தம் கேட்டு எங்களது உறவினர்கள் அனைவரும் வந்தபோது எதிரிகள் அவர்கள்வந்த வாகனத்தை எடுத்துகொண்டு வேகவேகமாக ஓடிவிட்டார்கள். அதன்பின்னர் எனது அக்கா சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

முதல்விசாரணையில் நான் கூறிய எனது சகோதரிக்கு அவரது திருமணத்தின்போது அளித்த சீதனங்களின் விபரங்களை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். எனது அக்காவின் மாமனார் அவருக்கு வேலை வாங்கி தருவதற்காக ரூ.5 லட்சம் கோரிய விபரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறினேன். மேற்படி பணத்தை கொடுக்காததால் எதிரிகள் எனதுஅக்காவிற்கு உணவு அளிக்க

மறுத்ததை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் எதிரி பெர்சிஸ்தாமஸ் என்பவரை இரண்டாவது திருமணம் செய்ததாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் பெர்சிஸ்தாமஸ் என்ற பெயரை குறிப்பிடவில்லை. ஆனால் ஒரு பெண்ணுடன் 1ம் எதிரி பேசிக்கொண்டிருப்பதாக கூறினேன்.

2. என் சகோதரி அளித்த புகார் மனுவை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். எனது சகோதரியை எதிரிகள் கொடுமைப்படுத்திய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எனது சகோதரி எனது தகப்பனாரிடம் கூறும்போது எனக்கு மேற்படி விபரங்கள் தெரியும் என்று போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். 2014ம் வருடம் ஒரு நாள் நாங்கள் விசாரித்துக் கொண்டிருப்பது தெரிந்து 1ம் எதிரியும், அவரது குடும்பத்தினரும் பாம்புகோவில்சந்தை என்ற ஊரில் உள்ள எங்கள் வீட்டிற்கு வந்து 1ம்எதிரிக்கு விவாகரத்து கொடுங்கள் எதற்காக விசாரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டு எனது அக்காவிடம் பிரச்சனை செய்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியும். நான் அங்குதான் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையெழுத்து என் அக்காவுடையதுதான். மேற்படி அ.சா.ஆ.1 புகார்மனுவில் சம்பவத்தன்று சம்பவ இடத்தில் எனது சகோதரியுடன் நானும் எனது தந்தையும் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அசாஆ.1 புகார் மனுவில், நான் முதல்விசாரணையில் கூறிய பாம்புகோவில் சந்தையில் உள்ள எங்கள் வீட்டில் நடைபெற்ற சம்பவம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல்விசாரணையில் எனது சகோதரி அவர் அன்றையதினம் அணிந்திருந்த நகைகள் மற்றும் அவரது ஆடைகளை எடுத்து வந்ததாக கூறினேன் என்றால் சரிதான்.

3. 2012ம் வருடம் முதல் 1ம் எதிரியும் எனது சகோதரியும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எந்த காலத்திலும் 2 முதல் 5 எதிரிகள் எனது

சகோதரியுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வரவில்லை என்றால் 3ம் எதிரி அரசி மட்டும் எனது சகோதரியுடம் ஒரே வீட்டில் திருமணம் நடந்து சுமார் 7 மாதங்களுக்கு உடன் இருந்தார். மேற்கூறிய 7 மாத காலத்தில் 2ம் எதிரி ஜெகநாதனும் எனது சகோதரி வாழ்ந்த வீட்டிற்கு அவ்வப்போது வந்து செல்வார். 2008ம் வருடம் திருமணம் ஆனபிறகு 1-1/2 வருட காலத்திற்கு 1ம் எதிரி மற்றும் எனது சகோதரிக்கிடையில் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் திருமணத்தின்போதும் தற்போதும் ஆசிரியராக பணி செய்து வருகிறார் என்றால் சரிதான். 2ம் எதிரி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். 5ம் எதிரி திருமணத்திற்கு முன்பிருந்தே டெக்ராடுனில் செவிலியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. குழந்தை பிறந்தபிறகு எனது சகோதரியையும், குழந்தையும் வீட்டிற்கு அழைத்துபோது எனது சகோதரி வரமறுத்ததற்காக அவருக்கு எதிராக சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலைத்தில் 2010ம் வருடம் 1ம் எதிரி புகார் மனு செய்தார் என்றால் சரியல்ல. அப்போது 1ம் எதிரியும், எனது சகோதரியும் ஒன்றாக வாழ்ந்து வந்தார்கள். எப்போது எனது சகோதரிக்கும் 1ம் எதிரிக்கும் இடையில் பிரச்சனை ஆரம்பித்தது என்றால் 2010ம் வருடம் 1ம் எதிரி வேறொரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்தது தொடர்பாக எனது சகோதரிக்கும் 1ம் எதிரிக்கும் இடையில் பிரச்சனை ஆரம்பித்தது. 2010ம் வருடம் 1ம் எதிரி வேறொரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்தார் என்று இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. இவ்வழக்கிற்கு முன்பு சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் எனது சகோதரி 1ம் எதிரிக்கு எதிராக புகார் மனு அளித்தார் என்றால் சரியல்ல. மேற்படி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனுவை விசாரணை செய்து அப்போது எனது சகோதரியை

1ம் எதிரியுடன் சேர்ந்து வாழுமாறு அனுப்பிவைத்தார்கள் என்றால் சரியல்ல. எனது சகோதரி அப்போதும் சேர்ந்து வாழ்வதற்கு செல்லாததால் 1ம் எதிரி எனது சகோதரியிடமிருந்து விவாகரத்து கோரி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் 2014ம் வருடம் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி விவாகரத்து வழக்கானது எனது சகோதரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு செய்ததன் பேரில் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்திலிருந்து சென்னை பூந்தமல்லியில் உள்ள சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விவாகரத்து வழக்கு தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 2015ம் வருடம் எனது சகோதரி அவருக்காகவும் அவரது மகனுக்காகவும் 1ம் எதிரியிடமிருந்து ஜீவனாம்சம் கோரி அம்பத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1ம் எதிரி எனது சகோதரிக்கும் அவரது மகனுக்கும் இடைக்கால ஜீவனாம்சம் தற்போதுவரை கொடுத்துவருகிறார் என்றால் சரிதான்.

6. சங்கரன்கோவில் 5 வீட்டு லைனில் இருந்து என்ஜிஓ காலனிக்கு 1ம் எதிரியும் எனது சகோதரியும் தனிக்குடித்தனம் சென்றபிறகு அவர்களுடன் 3ம் எதிரி உடன் இருந்தாரா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் நான் அளித்த வாக்குமூலம் தொடர்பான விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எனது சகோதரி கூறியதன்பேரில் எனக்கு தெரியும் என்றும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை CRPF ல் ஆய்வாளராக பணி செய்து தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட காலகட்டத்தில் எனது தந்தை CRPF ல் ஆய்வாளராக பணியில் இருந்தார் என்றால் சரிதான். இவ்வழக குதாக்கல் செய்வதற்கு முன்பு எனது சகோதரி 1ம் எதிரிக்கு விவாகரத்து அளிப்பதற்கு 1ம் எதிரியிடமிருந்து ரூ.25 லட்சம் கேட்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ரூ.25 லட்சத்தை 1ம் எதிரி தராதால் எனது தந்தையின் செல்வாக்கை பயன்படுத்தி இவ்வழக்கு பொய்யாக

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சகோதரி அளித்த பொய்வழக்கிற்கு அனுசரணையாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அதனால்தான் போலீசார் விசாரணையில் ஒருவாறு கூறிவிட்டு, நீதிமன்றத்தில் அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 170/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : சின்னத்தாய் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th June 2025.

1ம் **எதிரி ஆஜர். 2 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் பாம்புகோவில்சந்தையில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சாந்தாதேவி எனது அண்ணன் மகள். எதிரிகளை தெரியும். சுமார் 15 வருடத்திற்கு முன்பு 1ம் எதிரிக்கும் அ.சா.1க்கு சங்கரன்கோவில் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றதாக சொன்னார்கள். திருமணத்திற்கு நகைகள் அதிகம் போட்டார்கள். சீர்வரிசை அதிகமாக கொடுத்தார்கள். குழந்தை பிறந்தபின்னர் சின்ன பிரச்சனை நடந்தது. அ.சா.1க்கும் எதிரிக்கும் என்ன சண்டை என்று எனக்கு தெரியாது. பாம்புகோவிலில் உள்ள வீட்டில் வைத்து எதிரிகளுக்கும் அ.சா.1க்கும்இடையில்

பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு தெரியும். ஆனால் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. திருமணம் முடித்து சங்கரன்கோவிலில் மாப்பிள்ளையுடன் அ.சா.1 குடியிருந்து வந்தார். சுமார் 2 வருடத்திற்கு முன்பு குழந்தை பெற்றுக்கொள்வதற்காக பாம்புகோவிலில் உள்ள அவரது வீட்டிற்கு சென்றார். பாம்புகோவிலில் உள்ள வீட்டில் எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் இடையில் என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு பற்றிவேறு எதுவும் எனக்கு தெரியாது. பாம்புகோவிலில் வைத்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலீசார் விசாரணையின்போது நான் எதிரிகள் 35 பவுன் தங்க நகையும், 2 லட்சம் ரூபாய் ரொக்கமும் வரதட்சணையாக வேண்டி முடிவு செய்து 1ம் எதிரிக்கும் புகார்தாரருக்கும் இடையே திருமணம் நடைபெற்றதாக கூறியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரிகள் கொடுமை செய்ததால் அ.சா.1ன் அப்பா கொஞ்சம் கொஞ்சமாக பணம் கொடுத்து பணஉதவி செய்துவந்ததாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். அ.சா.1யிடம் எதிரிகள் கூடுதல் வரதட்சணையாக ரூ.5 லட்சம் கேட்டதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நகைகளை திரும்ப கேட்டபோது எதிரிகள் நகைகள் பேங்கில் இருப்பதாகவும் அதை திருப்பிதரமுடியாது என்று சொன்னவிபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எதிரிகள் அ.சா.1ன் நகைகளை வைத்துகொண்டு நம்பிக்கை மோசடி செய்ததாக போலீசார் விசாரணையில்

சொன்னேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி சம்பவம் நடந்ததை கேள்விப்பட்டு போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது 10 வருடங்களுக்கு மேலானதால் ஞாபகமறதியால் அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**